சார்பு நீதிமன்றம், பெருந்துறை

OS No: 27/2021

2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 28 நாள் Pw 1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அஹமது,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

Pw 1 (மனோகரன்) நாள் 28.07.2025

குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)

நான் ஓய்வு பெற்ற கிராம நிர்வாக உதவியாளர் என்றால் சரிதான். நான் 2020 ம் ஆண்டு ஓய்வு பெற்றேன். நான் கடைசியாக பெற்ற மாத சம்பளம் ரூ.25000/- எனக்கு 2 மகன்கள். எனது பணிக் காலத்தில் அரசாங்கத்தில் வழங்கப்படும் ஜிபிஎப் லோன் பெற்றிருந்தேன் என்றால் சரி. அதேபோன்று பண்டிகை கால முன் தொகைகளையும் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதியை எனக்கு 4-5 ஆண்டுகளாக தெரியும். நான் தாவாவிற்கு முன்பு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு சங்கதிகள் சரியானவை தான். நான் வாசாஆ 2 அறிவிப்பிற்கு கடனுறுதி சீட்டு அசலை வழக்கறிஞரிடம்காண்பித்து அதன் அடிப்படையில் தான் அந்த அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படுவது பிரதிவாதியின் ஆதார் அட்டை என்றால் சரிதான். அது **பிசாஆ 1.** பிசாஆ 1 ல் பிரதிவாதியின் பெயர் ராபியா அப்துல் ரகுமான் என்று சொல்லப்பட்டுள்ளது, அப்துல் ரகுமான் என்பவது அவரின் கணவர் பெயர். வாசாஆ 1 ல் பிரதிவாதியின் பெயர் ராபிகா என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடனுறுதி சீட்டில் அவரது கணவர் பெயர் ரகுமான் என்று சொல்லப்பட்டுள்ளது, அப்துல் ரகுமான் என்று சொல்லப்படவில்லை. கடனுறுதி சீட்டில் பிரதிவாதியின் வீட்டின் கதவு எண் மற்றும்

ஊர் பெயர் சொல்லப்படவில்லை. நான் வழக்கறிஞருக்கு கடனுறுதி சீட்டின் அசலை காண்பித்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியருந்தால் அதில் கடனுறுதி சீட்டில் உள்ள விவரங்கள் தான் சொல்லப்பட்டிருக்கும் என்றும் கடனுறுதி சீட்டு அறிவிப்புக்கு பின்பு தயார் செய்யப்பட்டதால் தான் அவரது பெயர் மற்றும் விலாத்த்தில் முரண்பாடுகள் உள்ளது என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள ஸ்டாம்பின் மீதும் அதன் கீழும் உள்ள பிரதிவாதியின் கையெழுத்தில் வேறுபாடு உள்ளது என்றால் எனக்கு அப்படி தெரியவில்லை. கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியுடையதல்ல என்றால் சரியல்ல. அதேபோல் கடனுறுதி சீட்டில் உள்ள 4 ரேகைகள் பிரதிவாதியுடையதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி அவர் எதிர்வழக்குரையில் கடனுறுதி சீட்டில் உள்ள அவரின் பெயர், கணவர் பெயர், ஊர் ஆகியவை தவறாக சொல்லப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளார் என்றால் சரி. பிரதிவாதி எதிர்வழக்கைுரை தாக்கல் செய்யும் முன்பு ஆவணத்தை நீதிமன்றதில் பார்வையிட்ட விவரம் எனக்கு தெரியாது. சாட்சி சந்திரன் எனக்கு தெரிந்த நபர். சாட்சி முருகேசன் அவரும் எனக்கு தெரிந்த நபர் தான். நான் பிரதிவாதிக்கு 3 லட்சம் கடன் கொடுத்ததற்கு தாவா கடனுறுதி சீட்டு நீங்கலாக வேறு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். எனக்கு நகைக் கடன் உள்ளது. எனகக்கு 3 லட்சம் கடன் கொடுப்பதற்கு வசதியுள்ளது என்பதை காட்டுவதற்கு ஆதரவுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின் பிரதிவாதி என் மீது வட்டாட்சியர் அலுவலகத்தில் புகார் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வட்டாட்சியர் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் முன்பாக பிரதிவாதி மனு கொடுத்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி கொடுத்த புகார் சம்பந்தமாக வட்டாட்சியர் ம்ற்றும் கோட்டாட்சியர் என்னை விசாரித்தனர் என்றும் வழக்கிற்காக விசாரிக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால்

சரியல்ல. நானும் சாட்சிகளும் கூட்டு சேர்ந்து பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்க வேண்டி அவரின் கையெழுத்து மற்றும் கைரேகைகளை மோசடி செய்து தாவா கடனுறுதி சீட்டு தயார் செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாசாஆ 2 ல் அவரச செலவு மற்றும் குடும்ப செலவு என்று சொல்லியுள்ளேன் என்றால சரி. கடனுறுதி சீட்டில் அவரச செலவினம், குடும்பத்திற்காகவும் வியாபாரத்திற்காகவும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் பிரதிவாதி அவசர செலவிற்காக பணம் கடன் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா வழக்குரை, கடனுறுதி சீட்டு மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் முன்னுக்கு பின் முரணான சங்கதிகள் சொல்லியிதிலிருந்தே நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் பிரதிவாதிக்கு பணம் கொடுக்கவில்லை என்றும், தாவா கடனுறுதி சீட்டு எழுதி பெறப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா கடனுறுதி சீட்டில் உள்ள பெயரின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடனுறுதி சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ராபிகா என்ற நபர் வேறு என்றும், பிரதிவாதி வேறு என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டின் அடிப்படையில் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED Digitally signed by M ASHFAQ AHAMED

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS